C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 OCTOBER 2024 ஆகாரம் : 10

விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும்
நிலைத்திருக்கிறது; இவைகளில்

## அன்பே

பெரியது

1 கொரிந்தியர் 13:13

So now faith, hope, and love abide, these three; but the greatest of these is Love. -1 Corinthians 13:13

# OCTOBER 2024

# UPCOMING EVENTS

**ALL** — **Wednesday** 7:30pm

Bible study & Prayer
Parsonage
Presbyter - 0567668348

**12, 26** — **Saturday** 7:30pm

Evening service
Presbyter - 0567668348

**19** — **Saturday** 7:30pm

Holy communion service
Presbyter - 0567668348

**11** — **Friday** 7:30pm

Men's Fellowship Prayer
Mr. Ashok Kumar
0508429659

**18** — **Friday** 8:00pm

Women's Fellowship Prayer
Mrs.Sagena Livingston
0553896871

**25** — **Friday** 8:00pm

Youth Fellowship Prayer
Mr.Stephen Chellaraj
0569906933

# FROM THE PASTOR'S DESK

அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

ஆண்டவர் இயேசுவின் கிருபையால் கிடைக்கப்பெற்ற புதிய மாதமாம் அக்டோபர் மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். அக்டோபர் மாத முக்கிய தினங்களில், குறிப்பாக அக்டோபர் 10ஆம் தேதி உலக மனநல தினம் மற்றும் உலக கண்ணொளி தினம் என்று உலகம் முழுமையிலும் கடைப்பிடிக்கப்படுகிறது.இதற்கான நோக்கம் உடல் சார்ந்து உள்ளம் சார்ந்து பாதிக்கப்பட்டிருப்போரும் நம் சகோதர, சகோதரிகளே என்று அன்புடனும் கவனத்துடனும் ஒவ்வொருவரும் வாழவே என்பதாகும்.

அமெரிக்காவின் அலபாமா மாகாணத்தில் உள்ள டஸ்கும்பியாவில் திரு.ஆர்த்தர் கெல்லர் & திருமதி.கேட் இவர்களுக்கு 27.06.1880 இல் பிறந்தவர் ஹெலன் கெல்லர் ஆவார். ஹெலனுக்கு 19 மாதங்களே ஆனபோது திடீரென்று ஏற்பட்ட மூளைக் காய்ச்சலால் பேசுவதையும், பார்வையையும், கேட்கும் திறனையும் இழந்தார். இதனால் தான் சொல்ல நினைத்ததை சொல்ல முடியாமல் ஹெலன் மன உளைச்சலுக்கு உள்ளானார். பெற்றோரும் மிகுந்த பாதிப்புடன் எத்தனையோ மருத்துவம் பார்த்தும் பயனில்லை. ஹெலனுக்கு ஆறு வயதானபோது தொலைபேசியை கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகாம்பெல் அவர்களை சந்தித்தனர். கிரகாம்பெல் அவர்கள் ஆனி சல்லிவன் என்ற ஆசிரியரை பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். அந்த சந்திப்பின் விளைவு, உலகிலேயே கல்லூரியில் பட்டம் பெற்ற முதல் பார்வையற்றவர் ஹெலன் என்பதும், ஹெலன் கெல்லர் 19 ஆம் நூற்றாண்டின் மிகச்சிறந்த ஆளுமைகளில் ஒருவர் எனவும் அறியப்பட்டார். ஹெலன் அறிவாளி,சிறந்த எழுத்தாளர், பேச்சாளர். பெண்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக போராடியவர். கண் பார்வையற்றோருக்கான பிரெய்லி முறையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், இலத்தின் ஆகிய மொழிகளை 10 வயதில் கற்றவர். 12 நூல்களை எழுதியவர். அவரின் தன்னம்பிக்கை, விடாமுயற்சி இவைகளே வாழ்வின் அடித்தளம் என்று குறிப்பிடுகிறார். பிரியமானவர்களே, நாம் வாழுகிற இக்காலச் சூழலில் மனநலம் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பவர்களுடன் எப்படிப் பழகுகிறோம், வாழுகிறோம் சிந்தித்து செயல்படுவோம்.

### கூப்பிடுங்கள்:

எரிகோ வீதியில் மக்கள் கூட்டத்திற்கு நடுவில் சீடர்களுடன் ஆண்டவர் இயேசு போகின்ற போது, பார்வையற்ற திமேயுவின் மகன் பர்திமேயு என்பவர் வழியருகே அமர்ந்து பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தவரின் குரல் இயேசு வருகிறார் என்று கேள்விப்பட்டவுடன், இயேசுவே! தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கும் என்று கூப்பிடுகிறார். தடைகளைக் கடந்து உரத்த சத்தமாய் கூப்பிட்டார். (மாற்கு 10:47,48)

### அழைப்பவர்:

பர்திமேயுவின் கூப்பிடுதல் சாதாரணமாக இருந்திருக்க வாய்ப்பில்லை. மாறாக அது அற்புத ராம் ஆண்டவர் இயேசுவையே நிறுத்திய குரல். அது அவரின் உள்ளத்தை அசைத்தது, அங்கேயே ஆண்டவரை நிறுத்தியது.உடனே ஆண்டவர் இயேசு நின்று பர்திமேயுவை அழைத்து வரச் சொன்னார். (மாற்கு 10:49) தன் மேல் இருந்த அழுக்கடைந்த, கிழிந்த, பழைய நாற்றமெடுத்த வஸ்திரங்களை எறிந்தவராக இயேசுவினிடத்தில் பரிதிமேயு வந்தார். (மாற்கு 10:50)

### கேட்பவர்:

ஆண்டவர் இயேசு பர்திமேயுவிடம் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். அவரின் உள்ளத்துள் என்ன வேண்டுகோள் உள்ளது என தெரிந்திட ஆண்டவர் இயேசு கேட்டிருக்கலாம். அதற்கு பர்திமேயு தனது வேண்டுகோளை, விண்ணப்பத்தை சரியாக ஆண்டவர் இயேசுவிடம் கேட்கிறார். மக்கள் எனக்கு கொடுப்பதோ, கொஞ்சக் காலமே எனக்கு உதவியாக இருக்கிறது. ஆனால் நீர் கொடுக்க இருப்பதோ இருண்ட என் வாழ்வின் ஒளியாக வாழ்நாள் முழுவதும் மாறப்போகிறது என்று சிந்தித்தாரோ, என்னவோ? உடனே ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்றார். (மாற்கு 10:51)

### அற்புதர்:

ஆண்டவர் இயேசு உன் விசுவாசமே உனக்கு விடுதலையைக் கொடுத்தது என்றார்.அவர் பார்வைய டைந்தார், தொடர்ந்து ஆண்டவருக்கு பின்னாகச் சென்றார். (மாற்கு 10:52) அற்புதர் இயேசு சர்வ வல்லமை பொருந்தினவர், "அவர் சொல்ல ஆகும்,கட்டளையிட நிற்கும்" (சங்கீதம் 33:9)

பிரியமானவர்களே, நாம் யாரை நோக்கி கூப்பிடுகிறோம். உலகம் சார்ந்தவர்களையா? அல்லது உலகத்தையே படைத்த ஆண்டவர் இயேசுவையா? தம்மை நோக்கிக் கூப்பிடுகிற ஒவ்வொருவரையும், ஆண்டவர் இயேசு அழைக்கிறார் அந்த அழைப்பினை உணர்ந்தவர்களாய் நமக்குள் இருக்கும் தடைகளான எல்லாவற்றையும் எறிந்தவர்களாய், விட்டொழித்தவர்களாய் இயேசுவிடம் செல்வோம் நம் விண்ணப்பங்களை அவரிடம் தெரிவிப்போம். ஆண்டவர் இயேசு செவி சாய்த்து அவற்றைக் கேட்கின்றார். அதற்கான பதிலை ஏற்ற காலங்களில் கொடுக்கின்றார். நிறைவான அற்புதம் செய்கின்றார். "கடவுளால் கூடாத காரியம் ஒன்றுமில்லை" (லூக்கா 1:37) ஆண்டவரின் அற்புதங்களை பெற்றுக் கொண்டவர்களாக, அவரின் பாதச்சுவடுகளை பின்பற்றி நடப்போம். உலகிலே உப்பாக வாழ்வோம், மெய்யான ஒளியாம் ஆண்டவர் இயேசுவிடம் அநேகரை வழிநடத்துவோம்.




இறைப்பணியில்,ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan





# ஆசி பெற்றவர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய திருப் பெயரில் வாழ்த்துக்கள்.

அன்புள்ள சகோதரி எலிசபெத்,

எலிசபெத் என்ற பெயருக்கு உண்மையானவர் என்று பொருள். இவர் ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவர், சகரியாவும் ஆசாரிய குடும்பத்தில் பிறந்தவர். இருவரும் கடவுளின் அனைத்து கற்பனைகளின் படியேயும், நியமங்களின் படியேயும் கர்த்தருக்கு முன்பாக நீதி உள்ளவர்களாக இருந்தார்கள். (லூக்கா 1:6)

## பக்தி வைராக்கியம்:

எலிசபெத்தும் சகரியாவும் குழந்தை இல்லாமல் வயது சென்றவர்களாக இருந்தார்கள். ஆனால் கடவுளிடத்தில் வைத்திருக்கும் பக்தி வைராக்கியம் கொஞ்சமும் குறையவில்லை. நம் ஆண்டவர் கொடுக்க வேண்டும் என்று நினைத்து விட்டால் யார் தடுத்தாலும் கிடைக்கும்.அவர் தர மறுத்தால் யார் பரிந்துரை செய்தாலும் அது கிடைக்காது. கர்த்தர் நமக்கு என்ன செய்ய திட்டம் வைத்திருக்கிறாரோ அதுதான் நமக்கு நல்லது. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டு கொள்ளும் என்பார்கள். அதுபோல ஐயோ எனக்கு இவையெல்லாம் கிடைக்கவில்லையே என்று வேதனை படக்கூடாது, நம் ஆண்டவர் இயேசு நம்முடன் இருக்கும் போது அனைத்தும் நன்மையே.

நம் ஆண்டவரின் பார்வைக்கு வயது ஒரு காரணம் இல்லை,படிப்பு ஒரு காரணம் இல்லை. நம் இயலாமையை இல்லாமையாக மாற்றுபவர் நம் கடவுள்.

எலிசபெத் தள்ளாத வயதிலும் தன் விசுவாசத்தில் தள்ளாடவில்லை. குழந்தை இல்லாத போது, விசுவாசத்தோடு வாழ்ந்த எலிசபெத் குழந்தை பெற்ற பின்பு கூடுதலான விசுவாசத்தோடு சாட்சியாக வாழ்ந்திருப்பார்.

ஆண்டவரின் தாயார் மரியாள் எலிசபெத்தை வாழ்த்திய போது குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று, எவருக்கும் கிடைக்காத பாக்கியம். (லூக்கா 1:41)எவ்வாறு எலிசபெத் மகிழ்ந்திருப்பார்.

உலக மீட்பராம் இயேசு பிறந்த பின்னர் தான் சிமியோனும், அன்னாளும் வாழ்த்தினார்கள். (லூக்கா 2: 25,38) ஆனால் எலிசபெத் இயேசுவை அவரது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அவரை வாழ்த்தும் பேறு பெற்றவரானார். சரியாகச் சொன்னால் முதன் முதலில் வாழ்த்தியவர் எலிசபெத் தான் என்பது நமக்கு தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது.

ஆண்டவரின் சொற்படி தன் மகன் யோவான்ஸ் நானனை வளர்த்தெடுக்கிறார்கள். "ஆண்டவருடன் இருப்பவர்களோடு ஆண்டவரும் இருப்பார்"(2 நாளாகமம் 15:2) அவர்களை ஆசிர்களால் நிரப்புவார் என்பதற்கு எலிசபெத் சாட்சி.

ஆண்டவருக்கு அஞ்சி நடப்போருக்கு, எல்லாமே மிஞ்சியே கிடைக்கும். ஆண்டவரிடம் இருந்து அநேகம் கொடையாக பெற்றுக் கொள்கிறோம். அந்தக் கொடைகளை எவ்வாறு பயன்படுத்துகிறோம்.எனவே, இவற்றையெல்லாம் சிந்திப்போம், சீர்தூக்கிப் பார்ப்போம்,சரியாக வாழ்வோம். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*



# செயலர் மடல்



ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு மகிமை உண்டாவதாக. இந்த 2024—ஆம் ஆண்டின் பத்தாம் மாதமாம் அக்டோபர் மாதத்தைக் காண கிருபை செய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கடந்த ஆகஸ்ட்,செப்டம்பர் மாதங்களில் நாம் ஜெபத்துடன் திட்டமிட்டிருக்கிற நமது திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகைக்காக குடும்பங்களாக தொடர்ந்து ஜெபியுங்கள். நவம்பர் 2—ஆம் தேதி சனிக்கிழமை அறுப்பின் பண்டிகைக்கான வழிபாடும், நிகழ்வுகளும் நேர்த்தியாக நமது E.C.C திருச்சபை வளாகத்தினுள் MAIN HALL நடந்திட ஜெபியுங்கள். அதற்கான WEEKLY FOOD SALES —ஐ மிகவும் அர்ப்பணிப்புடன் செய்து வருகிற திருச்சபையினருக்கு நன்றி. தொடர்ந்து அறுவடை பண்டிகைக்கான இல்ல சந்திப்புகள் நடைபெற்று வருகிறது.அதிலும் உற்சாகமாக ஈடுபடுகிற திருச்சபைக் குடும்பத்தினர் அனைவருக்கும் நன்றி. தொடர்ந்து ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள மற்ற திருச்சபைகளையும் (OTHER EMIRATES CHURCHES) சந்தித்து ஆயர் அவர்கள் இறைச்செய்தியை வழங்கி, அழைக்க இருக்கிறோம். தொடர்ந்து அறுவடை பண்டிகைக்காக குடும்பங்களாக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஆயத்தமாகுங்கள், பங்குபெறுங்கள். இது ஆண்டவரின் திருப்பணி இதற்காக நாம் கரம் கோர்த்து அர்ப்பணிப்புடன் செய்கின்றபோது ஆண்டவர் அதற்கான நிறைவினை நமக்கு கட்டளையிடுவார். "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாக போவான்" (ஏசாயா 6:8) சிந்தனைக்கு, பிரியமானவர்களே ஆண்டவர் இயேசுவின் அறைகூவல், அறுப்பு மிகுதி வேலையாட்களோ கொஞ்சம் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்கொள்ளுங்கள் (மத்தேயு 9:37,38) என்பதுவே. நம்மையும் ஆண்டவரின் திருப்பணிக்காக அர்ப்பணிப்போம், அர்ப்பணிப்புடன் இந்த அறுவடை பண்டிகையில் தனிநபர்களாக, குடும்பங்களாக நாம் பங்கேற்போம். "உன்னைப் போல் உன் அயலாரையும் நேசி" என்று திரு வார்த்தையை கடைபிடித்து அதனையே வாழ்வாக்குவோம். ஆண்டவர் இயேசு தந்திருக்கிற இந்த கிருபையின் காலத்தில் நம்மால் இயன்ற மட்டும் எழும்பி பிரகாசிப்போம், உலகிற்கு ஒளியாவோம். ஆண்டவர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

**இறைப் பணியில்**

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்



# நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும் ... இருப்பீர்களாக

1கொரிந்தியர்:15:58

எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக [1கொரிந்தியர்:15:58].

நாம் உலகத்திற்காக செய்கிற எந்த ஒரு வேலையும் நிரந்தரமற்றது. ஆனால் நம் தேவனுக்காக படுகிற ஒவ்வொரு பிரயாசத்திற்கும் நித்திய நித்தியமாய் பலன் உண்டு. ஒருவேளை நாம் தேவனுக்காக படுகிற பிரயாசத்திற்கு உலகில் பாராட்டுகள் கிடைக்காமல் போகலாம், மாறாக அவமானங்கள் நிந்தைகள் பரியாசங்களை அனுபவிக்க வேண்டியதாய் இருக்கும். ஆனால் தேவனுடைய பார்வையில் அது விலையேறப் பெற்றதாய் இருக்கிறது. வேதம் கூறுகிறது ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே [எபிரெயர்:6:10]. நம்முடைய பிரயாசங்கள் ஒருநாளும் வீண்போகாது. இதனை உணர்ந்து கொண்டவர்களாய் நாம் உறுதியோடும் அசையாதவர்களாயும் தேவனுடைய கிரியையில் பெருக வேண்டும்.

தேவனாகிய கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடும் அன்புகூர்ந்து, அவருடைய பிரமாணங்களையும், அவருடையகட்டளைகளையும், நியாயங்களையும், கற்பனைகளையும் எப்பொழுதும் கைக்கொள்வோம். வேதம் கூறுகிறது பின்பு, பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; அது கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்; அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்; ஆவியானவரும் ஆம் என்று திருவுளம்பற்றுகிறார் என்று சொல்லிற்று [வெளி:14:13]. எவ்வளவு பாக்கியம் பாருங்கள். தேவனுடைய பாதத்தில் நாம் செலவிடும் ஒவ்வொரு நிமிடமும் விலையேறப்பெற்றது. ஆண்டவரே இன்று முதல் நான் உமக்காக ஏதாவது ஒன்றை ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும் என்று தீர்மானம் எடுப்போம். நம்முடைய நேரத்தை, தாலந்தை, பணத்தை அவருக்காய் செலவிடுவோம். மழையானாலும்

வெயிலானாலும் சாக்குபோக்கு சொல்லாமல் அவருக்காய் ஓடுவோம், அவருக்காய் உழைப்போம்.நாம் இந்த மண்ணில் வாழும் போது மட்டும் தான் நாம் அவருக்காய் பிரயாசபட முடியும். ஆனால் நம்முடைய கிரியைகள் பரலோகத்தில் நம்மோடு கூட வரும் நமக்கு பலனை சேர்க்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே நாம் தாவீதைப் போல எப்பொழுதும் நம் தேவாதி தேவனை நம் முன்பாக வைத்திருப்போம்.தாவீதைப் போல அந்தி சந்தி மத்தியான வேளைகளிலும் எப்பொழுதும் நம் தேவாதி தேவனை துதித்து படி அவரில் மனமகிழ்ச்சியாய் இருப்போம்.ஒவ்வொரு நிமிடமும் ஜெபம் நாம் மூச்சாக இருக்கட்டும்.

என்ன வேலை செய்தாலும் நம் மனம் தேவனோடு உறவாடட்டும். நாம் தேவனுக்கும் மனிதர்களுக்கு முன்பாக குற்றமற்ற மனசாட்சியுள்ளவர்களாய் வாழ தேவ உதவியை நாடுவோம். எப்பொழுதும் இயேசுவை நம் வாழ்க்கையில் காண்பிக்கும்படி கிருபையுள்ள வார்த்தைகள் நம் வாயிலிருந்து புறப்படட்டும். இயேசுவின் மரணத்தை நம் சரீரத்தில் சுமந்தவர்களாய் சிலுவையை எடுத்துக் கொண்டு தேவகிருபையிலே பெருகுகிறவர்களாய் அவருக்காய் ஓடுவோம் உழைப்போம் செயல்படுவோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் தம்முடைய பரிசுத்த பிரசன்னத்தினால் நிறைத்து நம்மோடு கூட வாசம் பண்ணுவாராக. தேவகரம் நம்மை தொடர்ந்து வழிநடத்தட்டும்.

தேவனுடைய மெய்யான ஆசீர்வாதம் நம் ஒவ்வொருவரோடுங்கூட இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும் இருப்பதாக. ஆமென். ஆமென்

ARTICLE BY

MR. ASHOKKUMAR

MEN’S FELLOWSHIP



# பெபேயாள்

**"நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக் கொண்டு"— ரோமர் 16:1**

பவுலினுடைய ஊழியத்தின் நாட்களில் ஒரு குறிப்பிட்ட பட்டணத்து சபையோடு கூட தன்னை இணைத்துக் கொண்டு ஒரு ஊழியக்காரியாக செயல்பட்ட ஒரு பெண்ணைக் குறித்து தியானிக்கப் போகிறோம். இந்தப் பெண்ணின் பெயர் முழு வேதாகமத்திலும் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அவளுடைய ஊழியத்தின் விவரம் கூட இரண்டு வசனங்களில் தான் எழுதப்பட்டுள்ளது. அந்தப் பெண்ணின் பெயர் பெபேயாள். அவளைக் குறித்து ரோமர் எழுதின நிருபம் 16—ஆம் அதிகாரம் முதல் இரண்டு வசனங்களிலே நாம் வாசிக்கிறோம். "கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி ஏற்றுக் கொண்டு, எந்த காரியத்தில் உங்கள் உதவி அவளுக்கு தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன், அவள் அநேகருக்கும் எனக்கும் கூட ஆதரவாக இருந்தவள்." ரோமர் 16:1,2

இந்த பெபேயாளை குறித்து ஒரு அறிமுகத்தை பரிசுத்த பவுல் அடிகளார் சொல்லுகிறதை நாம் பார்க்கிறோம். "பெபேயாள்" என்று சொன்னால் "பிரகாசமான வெளிச்சம்" என்று அர்த்தம். அவள் ஊர் "கெங்கிரேயா". ரோமர் 16—ஆம் அதிகாரத்தில் 23 ஆண்களுடைய பெயர்களையும் 11 பெண்களுடைய பெயர்களையும் பவுல் குறிப்பிட்டு இந்த அதிகாரத்தில் வாழ்த்துகிறேன் என்று சொல்லி இருப்பார். ஏனென்றால், அப்போஸ்தலராகிய பவுலை கவர்ந்தவர்களுடைய குணாதிசயங்கள் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யோவான் 10:15 மேய்ப்பன் ஆடுகளின் பெயர்களை அறிந்திருக்கிறது போல பவுலும் ரோமாபுரியில் ஊழியத்திற்கு உதவும் அவர்களை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தார், அவர்களுக்காக கரிசனையோடும் இருந்தார்.

## 1.வெளிச்சம் :

பெபேயாள் தன் பெயருக்கு ஏற்றபடி வெளிச்சம் உடையவராக காணப்பட்டாள். வெளிச்சம் அற்றவர்களுக்கு பிரயோஜனப்படும்படியாகவும் காணப்பட்டாள். Warren Weirsbe என்ற வேத ஆராய்ச்சியாளர் கூறும் போது, பெபேயாள் ரோமாபுரியில் உள்ள விசுவாசிகளுக்கு ஏற்பட்ட சட்ட சிக்கல்களை தீர்ப்பதற்கு உதவி செய்ததாக கூறுகிறார். ஏனென்றால் இந்த பெபேயாள் வெளிச்சம் உடையவளாய் இருந்தாள். என்னுடைய வீட்டில் இருக்கும் பிரச்சினையை தீர்க்க முடியவில்லையே, என்னுடைய வீட்டில் இருக்கிற சிக்கல்களை தீர்க்க என்னால் முடியவில்லையே என்று நினைக்கிறீர்களா? அதற்கு நமக்கு வெளிச்சம் தேவை. வசன வெளிச்சம் தேவை. “கர்த்தருடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது” என்று சங்கீதம் 119:105 கூறுகிறது.

## 2.நாட்டப்படுதல்:

கொரிந்து சபையால் ஸ்தாபிக்கப்பட்டது தான் கெங்கிரேயா சபை. இந்த கெங்கிரேயா சபையார் கொரிந்து பட்டண சபையுடன் இணைந்து தான் ஊழியம் செய்கிறார்கள். Mae Arthur என்னும் வேத ஆராய்ச்சியாளர், பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கும் போது தான் இந்த ரோமர் நிருபத்தை எழுதினதாக கூறுகிறார். கெங்கிரேயா பட்டணம் கொரிந்து பட்டணத்திற்கு மிக அருகே இருந்த போதும், அங்கு அப்போஸ்தலனாகிய பவுலும் இருந்த போதிலும், அந்தக் கொரிந்து பட்டணத்திற்கு செல்லாமல் தான் நாட்டப்பட்ட கெங்கிரேயா சபையிலேயே நிலைத்திருந்ததை காணலாம். பெபேயாள் இங்கும் அங்கும் திரிபவளாக காணப்படாமல், ஒரே இடத்தில் நாட்டப்பட்டவளாக இருந்தாள். சபைக்கு பிரயோஜனம் உள்ளவளாகவும், சபையில் ஊழியம் செய்கிறவளாகவும், நாட்டப்பட்ட இடத்தில் பொறுப்பாயும், உண்மையாயும் இருந்த அவளுடைய கையில் தான் ரோமருக்கு எழுதுன நிருபத்தை ஒப்புவித்து ரோமாபுரிக்கு பவுல் அனுப்புகிறார்.


“கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப்பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்” என்று சங்கீதம் 92:13 கூறுகிறது. நாமும் பெபேயாளை போல ஒரே இடத்தில் நாட்டப்பட்டவர்களாய் கர்த்தர் நாட்டின சபையில் நிலைத்திருப்போம்.

## 3.ஊழியம் :

பெபேயாள் அநேகருக்கும், எனக்கும் கூட ஆதரவாய் இருந்தவள் என்று ரோமர் 16:2—ல் கூறுகிறார். அவள் தனக்கு கொடுக்கப்பட்ட ஊழியமாகிய ரோமர் நிருபத்தை சுமந்து கொண்டு சென்று ரோம சபையாருக்கு பிரயோஜனம் உள்ளவர்களாய் இருந்தாள். 6 முதல் 8 மையில்

போகிற பாதையில் தடைகள் வந்திருக்கலாம். ஆனாலும் ஊழியத்தை உண்மையாகவும், பயபக்தியோடும் நிறைவேற்றுகிறாள். அவள் மட்டும் இதை உண்மையாய் செய்திராவிட்டால், ரோமருக்கு எழுதின நிருபம் வேதத்தில் இடம் பெற்றிருக்க வாய்ப்பேயில்லை. அதனால் தான் அப்போஸ்தலனாகிய பவுல் பெபேயாளை ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி என்று குறிப்பிடுகிறார். இவள் அந்நியருக்கு ஆதரவாய் இருந்தவள் என்றும், பெண்கள் மத்தியில் ஆண்களால் செய்ய முடியாத ஊழியங்களை இவள் செய்ததாகவும், ஞானஸ்நான சத்தியத்திற்குள்ளாக நடத்தினாள் என்றும் Dake's என்ற வேத ஆராய்ச்சியாளர் கூறுகிறார். ஆகவே தான் அதுவரை ஆண்களை அழைக்க மட்டும் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்த "Deacon" என்ற வார்த்தை பெபேயாளுக்கு பயன்படுத்தப்பட்டது. நமக்கு கொடுக்கப்பட்ட சிறிய பொறுப்புகளையும் பயபக்தியோடும், உத்தரவாதத்தோடும், உண்மையோடும் நிறைவேற்றுவோம்.

"கர்த்தாவே பெபேயாளைப் போல நாங்களும் வெளிச்சமாகவும், நாட்டப்பட்டவர்களாகவும், நற்கிரியைகள் செய்ய எங்களுக்கு உதவி செய்யும்".




Article by

## SIS. SHERRIN VERSLIN BENNY

WOMEN'S Fellowship

# தாவீது



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

## முன்குறிக்கப்பட்டவர்:

இப்பகுதியில் சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினார். ஆனால் உண்மையில் தாவீது தான் பிறப்பதற்கு முன்பே ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டவர் 1சாமுவேல் 13:1-ல் ஒன்றாம் சவுல் அரசாட்சி செய்த இரண்டாம் வருஷம் என்று தொடங்கி 14 ஆம் வசனத்தில் கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனை தலைவனாய் இருக்க கட்டளை இட்டார் என்று உள்ளது. சவுல் 38 ஆண்டுகள் ராஜாவாக அரசராய் இருந்த பின் தாவீது தன் முப்பதாவது வயதில் ராஜாவானான் அப்படியெனில் தாவீது பிறப்பதற்கு 8 ஆண்டுகளுக்கு முன்பே ராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்டார் இதை உறுதி செய்யும் வசனம் மத்தேயு 1:6-ல் ஈசாய் தாவீது ராஜாவைப் பெற்றான் என்று உள்ளது இதில் தாவீது பிறக்கும்போதே ராஜாவாகத்தான் பிறந்தான்.

தாவீது எப்படி தன் பிறப்பிற்கு முன்பே ராஜாவாக தெரிந்து கொள்ளப்பட்டாரோ அதுபோல,நாமும் எபேசியர் 1:4-ன்படி நாம் பிறப்பதற்கு முன்பே தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் தாவீதுக்கும் மேலாக நம்மை கடவுள் உலகத் தோற்றத்திற்கு முன்பே தெரிந்து கொண்டார் என்று எபேசியர் புத்தகம் கூறுகிறது.

## ராஜாக்களும் ஆசாரியர்களும் நாமே:

ஒன்று சாமுவேல் 16:2-ஆம் வசனத்தில் சாமுவேலுக்குள் ஒரு பயம் இருக்கிறது. நான்காம் வசனத்தில் அந்த ஊரில் இருப்பவர்கள் தத்தளிப்போடு சாமுவேலிடம் வந்தார்கள்.1 சாமுவேல் 15:27-30 வரை உள்ள வசனங்களில் இஸ்ரவேலில் ராஜாவாக இருந்த சவுல்

பயத்துடன் இருந்தான். ஆனால் தாவீது கர்த்தர் ஒருவருக்கே பயந்து இருந்தபடியால் மற்ற மனுஷருக்கு பயமில்லாமல் வாழ்ந்தான்.

1சாமுவேல் 16:5-ல் அந்த ஊர் மக்களை சாமுவேல் பரிசுத்தம் பண்ண சொன்னார், ஈசாய் மற்றும் அவர் குமாரர்களை பரிசுத்தம் பண்ணினார். ஆனால் தாவீது வரும்போது அவரை பரிசுத்தம் செய்யவில்லை. ஏனெனில் தாவீது இரவும் பகலும் ஆண்டவரை துதித்துப் பாடி தன்னை சுத்திகரித்துக் கொண்டே இருந்தார்.

1சாமுவேல் 10:1-ன்படி சவுல் தைலக்குப்பியின் மூலம் அபிஷேகம் பண்ண பட்டார், ஆனால் 1சாமுவேல் 16:13-ன் படி தாவீது தைலக் கொம்பினால் அபிஷேகம் பண்ண பட்டார். தைலக்குப்பி அபிஷேகம் மனுஷப் பிரகாரமானது, ஆனால் தைலக் கொம்பின் அபிஷேகம் தெய்வீகமானது.

இவ்வாறு பயமில்லாமல் இருப்பதும், தன்னை பரிசுத்தமாக காத்துக் கொள்வதும் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுவதும், ராஜாவாகவும் ஆசாரியராகவும் இருப்பவருக்குரிய குணாதிசயங்கள் ஆகும்.

2சாமுவேல் 6:14-ன்படி தாவீது ஆசாரியர் மாத்திரம் தரிக்கக் கூடிய ஏபோத்தை தரித்திருந்தான், மாற்கு 2:25,26-ல் தாவீது தெய்வ சமுகத்து அப்பங்களை சாப்பிட்டார்,தாவீது யூதா குலத்தை சேர்ந்தவர்.ஆனால் அவர் ஆசாரியராகவும் இருந்தார். ஏனெனில் அவர் மெல்கிசேதேக்கின் முறையை கைக்கொண்டார்.

தாவீதைப்போல நாமும் வெளி 1:6-ன் படி கர்த்தர் நம்மை ராஜாக்களும் ஆசாரிகளுமாக்கினார்.எனவே உலகப்பிரகாரமான ஆசீர்வாதத்திற்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்திற்கும் நாம் தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம்.

### தாவீதின் குமாரனாகிய இயேசு கிறிஸ்து:

ஒன்று சாமுவேல் 16:11-ல் இஸ்ரவேலில் உள்ள எல்லா மக்களுக்கும் தீர்க்கதரிசியாக இருந்த சாமுவேல் பலி விருந்து சாப்பிடக்கூடாதபடி தாவீதின் அழைப்பு தடை செய்தது. இந்த பலி விருந்துக்கு எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட தாவீதை,தேவன் அந்த எல்லார் மத்தியிலும் அபிஷேகம் பண்ணினார்.

இந்த அபிஷேகத்திற்குப் பின் கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் இறங்கி இருந்தார். இதனால் தாவீதை ஆவியானவர் மெல்கிசேதேக்கு முறையைக்கைகொள்ளச்



செய்தார். (சங்கீதம் 110:4) அதுபோல இயேசு கிறிஸ்துவும் மோசே,ஆரோன் மூலமாக ஆசாரிய ஊழியம் செய்யாமல் எபிரேயர் 7:17-ன்படி மெல்கிசேதைக்கின் முறைமைப்படி ஆசாரியரானார். இந்த அடிச்சுவடை இயேசு கிறிஸ்து கைக்கொண்டபடியால் தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டார். தாவீதின் குமாரன் என்று இயேசு கிறிஸ்து அழைக்கப்பட்டாலும்,தாவீது இரட்சிக்கப்பட இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவைப்படுகிறது. எனவே தாவீது இயேசு கிறிஸ்துவை ஆண்டவர் என்று அழைத்தார்.

அதுபோல நாமும் ரோமர் 8:2-ன்படி நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாமல் ஆவியின் பிரமாணத்தை கைக்கொண்டால் இயேசு கிறிஸ்து தாவீதின் குமாரன் என்று அழைக்கப்பட்டது போல, நாமும் தாவீதின் குமாரன் என்றும் இயேசு கிறிஸ்துவின் குமாரன் என்றும் அழைக்கப்படுவோம்.

## நிறைவாக

பிரியமானவர்களே, நாமும் கிறிஸ்துவுக்குள் முன் குறிக்கப்பட்டவர்கள் மெல்கிசேதேக் முறமையின்படி ராஜாக்களும் ஆசாரியர்களும் ஆக அழைக்கப்பட்டவர்கள். எனவே, கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய பரிசுத்த ஆவியின் பிரமாணத்தின்படி நடக்கிறவர்களாக இருக்க வேண்டும், ஆமென்.

ARTICLE BY

**MR. ASHOK JAYAKUMAR**

YOUTH FELLOWSHIP

# சாட்சிப் பகுதி

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை"(யோசுவா1:5) என்று சொன்ன நம் கர்த்தர் அனுதினமும் எங்களைக் கிருபையாக தாங்கி வழிநடத்தி வருகிறார்.

எங்கள் குடும்பத்தின் பொருளாதாரக் கடின சூழலில், எங்களுக்கு விடுதலை வாழ்வைத் தந்து எங்களை குடும்பமாக ஜீவனுள்ள சாட்சியாக நிலை நிறுத்தியுள்ள நம்முடைய ஆண்டவர் இயேசுவுக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் கடந்து வந்த எல்லா இக்கட்டான சூழ்நிலைகளிலும், கர்த்தர் எங்களுக்கு அருளின பாதுகாப்பிற்காகவும்,மனித தயவுகளுக்காகவும், ஞானத்திற்காகவும் பொறுமை காக்கவும் ஆண்டவர் இயேசுவுக்கு நாங்கள் குடும்பமாக நன்றிகளை ஏறெடுக்கிறோம். கர்த்தருடைய நாமம் மாத்திரம் மகிமைப்படுவதாக.

இப்படிக்கு,

**MRS. JEYANTHA JOHN**









**CHAMPS FOR CHRIST '24**










# CHAMPS FOR CHRIST '24



















# SEPTEMBER WINNERS

## KIDS COLORING

- HAZEL HARTLYN
- ESIL BERNICE
- JOHANA JOSE

## FIND THE WAY

- HAZEL HARTLYN
- JESIL BERNICE
- SHERINSHA
- JOSHUA JOSE

## WORD SEARCH

- HAZEL HARTLYN
- JESIL BERNICE
- SHERINSHA
- JOSHUA JOSE

## CROSS WORDS

- SHERINSHA

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month – Year

To Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# 1SAMUEL 20-31

## 1சாமுவேல் 20–31

OCTOBER '24 - QUESTIONS

QUIZ TIME?

1. அம்புகளைக் குறித்த காரியம் தெரியாதி ருந்தது யார்?
2. தாவீதை பித்தங் கொண்டவன் என்று கூறியது யார்?
3. எண்பத்தைந்து ஆசாரியர்களைக் கொன்றது யார்?
4. சவுல்,தாவீதை விட்டு திரும்பின இடத்திற்கு என்ன பேரிட்டார்கள்?
5. என் குமாரனாகிய தாவீதே'என்று சத்தமிட்டு அழுதது யார்?
6. தன் இருதயம் செத்து கல்லைப் போலானவன் யார்?
7. மதியில்லாமல் தவறு செய்தேன் என்று கூறியது யார்?
8. தாவீது பெலிஸ்தரின் நாட்டிலே குடியிருந்த காலம் எவ்வளவு?
9. இராப்பகல் முழுதும் ஒன்றும் சாப்பிடாதிருந்தவன் யார்?
10. தேவனுடைய தூதனைப்போல இருந்தவன் யார்?
11. சரி பங்காக பங்கிடுங்கள் என்று கூறியது யார்?
12. சவுலின் ஆயுதங்களை எங்கே வைத்தார்கள்?

### செப்டம்பர்- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. 1சாமு 8:19 | 2. 1சாமு 9:18 | 3. 1சாமு 10:27 | 4. 1சாமு 11:14,15 | 5. 1சாமு 12:18
6. 1சாமு 13:19. | 7. 1சாமு 14:46 | 8. 1சாமு 15:22 | 9. 1சாமு 16:23 | 10. 1சாமு 17:28
11. 1சாமு 18:27 | 12.1சாமு 19:18,22

திருமதி.பிப்ளின் நெல்சன், திருமதி. ஜோனிஷ் ஹெர்சில்


ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / october'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348








Class : Intermediate

Teacher : Mrs. Shaly Melbin

Name:

Date:

# Kids Coloring




Find the Way

Name : ..........................................

# "I AM" THE LIGHT OF THE WORLD

Follow Jesus, the Light of the World

START



FINISH



# WORD SEARCH

## Deborah


| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | I | P | B | E | T | H | E | L | T | D | H | E | E |
| A | D | R | T | T | T | D | M | P | E | O | B | L | N |
| R | Y | O | D | P | A | S | I | O | S | T | A | E | M |
| A | P | P | S | T | B | T | A | I | U | A | T | P | A |
| K | S | H | A | H | O | O | M | S | T | N | S | H | O |
| M | S | E | R | O | R | I | N | R | B | U | T | R | R |
| L | R | T | A | U | E | R | E | A | H | S | H | A | A |
| A | B | E | C | S | O | A | L | E | A | I | E | I | M |
| P | L | S | T | A | A | H | O | L | R | S | O | M | A |
| B | E | S | R | N | N | C | R | I | O | E | S | I | H |
| C | A | O | O | D | N | A | D | T | B | R | P | D | I |
| R | D | A | O | S | O | T | A | E | E | A | A | S | B |
| R | E | L | P | R | R | E | M | N | D | A | R | M | Y |
| R | R | P | S | A | D | E | S | S | E | R | P | P | O |

Name : ..........................................................

CROSS WORDS

Name : ..........................................................................

# Deborah and Barak




**Across**

**3.** The commander of the king of Canaan's army

**6.** the commander of the army of Israel

**8.** They were fitted with iron

**10.** The father of the commander of the army of Israel

**11.** Name means "bee"

**Down**

**1.** The commander of the king of Canaan's army

**2.** The woman who stabbed Sisera

**4.** What was used to kill Sisera

**5.** Husband of the leader of Israel at the time

**7.** The king of Canaan

**9.** The part of the body that Sisera got stabbed

# OCTOBER - 2024

| | |
|---|---|
| 01-OCTOBER | Mrs. John Gerald Sheeba Derick |
| 01-OCTOBER | Ms. H. Johanna Jane D/o Mr. Havin Heba |
| 01-OCTOBER | Ms. Angilin Remi Princy D/o Mr. Rajan Prabakaran |
| 03-OCTOBER | Ms. Smyrna Syntche D/o Mr. Santhosh Kumar. M |
| 04-OCTOBER | Mr. J. Stephen Chellaraj |
| 05-OCTOBER | Mr. Praveen Paul |
| 05-OCTOBER | Master. Immanuel Suthan S/o Mr. David Sornabalan |
| 07-OCTOBER | Ms. Nivina Chandrasekar D/o Mr. Chandrasekar |
| 08-OCTOBER | Mr. Sharvin John |
| 08-OCTOBER | Ms. Akila D/o Mr. Ravichandran. A |
| 09-OCTOBER | Ms. Janet Zaharina D/o Mr. Arunkumar. K |
| 11-OCTOBER | Ms. D.P. Mercy D/o Mr. Deva Prakash. S |
| 11-OCTOBER | Mr. Prabu Dinesh Kumar |
| 13-OCTOBER | Mrs. Anitha Geroge |
| 14-OCTOBER | Mrs. Godshilin |
| 15-OCTOBER | Master. Jovin S/o Mr. Yobu. A |
| 15-OCTOBER | Master. Godson Daniel Rao S/o Mr. Danesh Yogendra Rao. |
| 17-OCTOBER | Mrs. Sahila Grace Justin |
| 18-OCTOBER | Mrs. Helen Hemabai |
| 20-OCTOBER | Ms. Aidean Joyphonse Derick D/o Mr. Derick Gasbath Joy. |
| 20-OCTOBER | Mrs. Patricia Santhi |
| 20-OCTOBER | Master. Leon Roy Samuel S/o Mr. Sunith Samuel |
| 21-OCTOBER | Ms. Athithi Shamma D/o Mr. Celin Jose |
| 21-OCTOBER | Mr. J.C. Jesho |

| | |
|---|---|
| 22-OCTOBER | Mrs. Sheeba Deva Prakash |
| 23-OCTOBER | Ms. B.N. Kariss Angelo D/o Mr. Baskar. S.P |
| 23-OCTOBER | Mrs. Biblin Christabel |
| 24-OCTOBER | Mr. Justin Oliver |
| 24-OCTOBER | Ms. A. Jemimah D/o Mr. Ashok Kumar |
| 27-OCTOBER | Mr. Jayan Dharmaraj |
| 29-OCTOBER | Ms. Abigail Christine D/o Mr. Praveen Paul |
| 30-OCTOBER | Mr. Pavul Hensman |
| 30-OCTOBER | Mr. Ashok Jayakumar Hanly Paul |
| 31-OCTOBER | Master. Eion Jayden S/o Mr. Jason Samuel |



# OCTOBER *Wedding* ANNIVERSARY

**05- OCT**
Mr. Ravindra
&
Mrs. Sunitha Ravindra

**11- OCT**
Mr. Daniel Durai Singh
&
Mrs. Pamela Rachel Daniel

**21- OCT**
Mr. Prabu Dinesh Kumar
&
Mrs. Rebecca




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY